ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka
සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

42 T I

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2010 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2010 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2010

| | |
|---|---|
| හින්දු ධර්මය I<br>இந்து சமயம் I<br>Hinduism I | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |

சுட்டெண் : ....................

※ **'அ'** பகுதியிலுள்ள **முதலாம்** வினாவுக்கும் **'ஆ'** பகுதியிலுள்ள எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

※ முதலாம் வினாவுக்கான விடைகளை இத்தாளிலேயே எழுதிய பின் வேறாக்கி ஏனைய விடைத்தாள்களின் மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி அ

(எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக)

**1.** ● பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

1.1 ஆடலரசன் பக்தர்களுக்கு அருளும் பொருட்டு களிநடனம் செய்த தலங்கள் மூன்று அடங்கும் தொகுதி
(1) தில்லை, திருவாலங்காடு, மதுரை
(2) திருநெல்வேலி, திருக்குற்றாலம், திருச்சிராப்பள்ளி
(3) பொன்மன்றம், மணிமன்றம், கலியாணமன்றம்
(4) கனகசபை, இரத்தினசபை, பொற்சபை
(5) தில்லை, திருக்குற்றாலம், திருப்பெரும்குன்றம் (......)

1.2 சைவக்கிரியை நெறியின் பொதுஅம்சம் மூன்று அடங்கும் தொகுதி
(1) தோத்திரம், அபிஷேகம், தீபாரதனை
(2) அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம்
(3) தீபாரதனை, அர்ச்சனை, ஆர்திராபூசை
(4) பிரதிட்டை, திரவியசுத்தி, தீபபூசை
(5) அனுஞ்ஞை, கிராம சாந்தி, காலபூசை (......)

1.3 சைவசித்தாந்த சாத்திரங்களுள் மூன்று அடங்கும் தொகுதி
(1) திருவுந்தியார், திருக்களிற்றுப் பாடியார், ஞானாமிர்தம்
(2) சிவஞானசித்தியார், இருபா இருபஃது, காமிகம்
(3) உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், சைவசித்தாந்தத் திறவுகோல்
(4) திருவருட்பயன், வினா வெண்பா, சமயக் கட்டுரை
(5) சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் (......)

1.4 ஔவைப்பிராட்டி பாடிய அறநூல்கள் மூன்று அடங்கிய தொகுதி
(1) ஏலாதி, முதுமொழிக்காஞ்சி, சிறுபஞ்சமூலம்
(2) வாக்குண்டாம், நல்வழி, நீதிநெறி விளக்கம்
(3) ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை
(4) திருக்குறள், நாலடியார், நீதிவெண்பா
(5) நன்னெறி, நல்வழி, நாலடியார் (......)

1.5 ஈழநாட்டிலே எழுந்த காலத்தால் முந்திய சைவபுராணங்கள் மூன்று அடங்கும் தொகுதி
(1) சூதுபுராணம், கோட்டுப்புராணம், கனகிபுராணம்
(2) தலபுரணம், இளசைபுராணம், சீமந்தினிபுராணம்
(3) தட்சிணகைலாசபுராணம், திரிகோணாசலபுராணம், திருக்கரைசைப்புராணம்
(4) சிதம்பரசபாநாதபுராணம், ஈழத்துச் சிதம்பரபுராணம், சீமந்தினிபுராணம்
(5) புலியூர்ப்புராணம், கந்தசட்டிப்புராணம், சாதிநிர்ணயபுராணம் (......)

[பக். 2 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 T I**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2010 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2010 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2010

හින්දු ධර්මය I
இந்து சமயம் I
Hinduism I

※ எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி ஆ

2. "இறைவனின் இருப்புப் பற்றிய சிந்தனைகளை ஆய்வுக்குட்படுத்தி நிறுவிய பெருமை உபநிடதங்களையே சாரும்." இக்கூற்றை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.
   (அ) உபநிடதம் என்பதன் பொருள்
   (ஆ) வேத சிந்தனைகளுக்கும் உபநிடத சிந்தனைகளுக்கும் இடையிலான தொடர்புகளும் பிரச்சினைகளும்
   (இ) உபநிடதங்கள் இறைவனின் இருப்புப் பற்றியும் வியாபகம் பற்றியும் நிரூபிக்க மேற்கொண்ட உத்திகள்
   (ஈ) இந்து தத்துவ உருவாக்கத்தில் உபநிடதங்கள் கொண்டிருக்கும் பங்கு

3. "பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்." இக்கூற்றை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.
   (அ) பல்லவர் காலச் சூழ்நிலை
   (ஆ) திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்
   (இ) இறைவனை அடைவதற்கு திருஞானசம்பந்தர் கையாண்ட சாதனைகள்
   (ஈ) சைவசித்தாந்த உருவாக்கத்தில் திருஞான சம்பந்தர் பாடல்கள் பெறும் முக்கியத்துவம்

4. "சாதனைகள் இன்றி முத்தியில்லை. சாதனைகளை எடுத்துக்காட்டி, மதிப்பீடு செய்யும் இலக்கியமே பெரிய புராணமாகும்." இதனை மேல்வரும் விடயங்களூடாக விளக்குக.
   (அ) பெரிய புராணம் எழுந்த காலமும் சூழ்நிலையும்
   (ஆ) பெரிய புராணத்தின் பொருள் மரபு
   (இ) பெரிய புராணம் சைவ உலகிற்குப் புகட்டும் அறிவுரை

5. "மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரியது." என்பதை அடிப்படையாகக் கொண்டு விநாயகர் வழிபாட்டை விளக்குக.

6. மேல்வரும் படிமங்களுள் **ஒன்றைத்** தெரிந்து அதனைக் கலாவிமர்சனம் செய்க.
   (அ) யோகதட்சிணாமூர்த்தி வடிவம்
   (ஆ) இலிங்கோற்பவர்
   (இ) அப்பர் சுவாமிகள்

7. (அ) மெய்கண்ட தேவரின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுக.
   (ஆ) சிவஞானபோதம் சைவசித்தாந்த வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுக.

8. தமிழகத்தில் வைணவநெறியின் வளர்ச்சியில் பெரியாழ்வாரின் பங்களிப்பினை மதிப்பிடுக.

9. மேல்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றினுக்குக்** குறிப்பு எழுதுக.
   (அ) காரைக்காலம்மையார்
   (ஆ) நவநாதசித்தர்
   (இ) பிராமணங்கள்
   (ஈ) மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை
   (உ) மடாதிபதிகளும் ஒழுகலாறும்

※※※

ශ්‍රී ලංකා සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 T I**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2010 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2010 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2010

හින්දු ධර්මය I
இந்து சமயம் I
Hinduism I

※ எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி ஆ

2. "இறைவனின் இருப்புப் பற்றிய சிந்தனைகளை ஆய்வுக்குட்படுத்தி நிறுவிய பெருமை உபநிடதங்களையே சாரும்." இக்கூற்றை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.
   (அ) உபநிடதம் என்பதன் பொருள்
   (ஆ) வேத சிந்தனைகளுக்கும் உபநிடத சிந்தனைகளுக்கும் இடையிலான தொடர்புகளும் பிரச்சினைகளும்
   (இ) உபநிடதங்கள் இறைவனின் இருப்புப் பற்றியும் வியாபகம் பற்றியும் நிரூபிக்க மேற்கொண்ட உத்திகள்
   (ஈ) இந்து தத்துவ உருவாக்கத்தில் உபநிடதங்கள் கொண்டிருக்கும் பங்கு

3. "பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்." இக்கூற்றை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.
   (அ) பல்லவர் காலச் சூழ்நிலை
   (ஆ) திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்
   (இ) இறைவனை அடைவதற்கு திருஞானசம்பந்தர் கையாண்ட சாதனைகள்
   (ஈ) சைவசித்தாந்த உருவாக்கத்தில் திருஞான சம்பந்தர் பாடல்கள் பெறும் முக்கியத்துவம்

4. "சாதனைகள் இன்றி முக்தியில்லை. சாதனைகளை எடுத்துக்காட்டி, மதிப்பீடு செய்யும் இலக்கியமே பெரிய புராணமாகும்." இதனை மேல்வரும் விடயங்களூடாக விளக்குக.
   (அ) பெரிய புராணம் எழுந்த காலமும் சூழ்நிலையும்
   (ஆ) பெரிய புராணத்தின் பொருள் மரபு
   (இ) பெரிய புராணம் சைவ உலகிற்குப் புகட்டும் அறிவுரை

5. "மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரியது." என்பதை அடிப்படையாகக் கொண்டு விநாயகர் வழிபாட்டை விளக்குக.

6. மேல்வரும் படிமங்களுள் **ஒன்றைத்** தெரிந்து அதனைக் கலாவிமர்சனம் செய்க.
   (அ) யோகதட்சிணாமூர்த்தி வடிவம்
   (ஆ) இலிங்கோற்பவர்
   (இ) அப்பர் சுவாமிகள்

7. (அ) மெய்கண்ட தேவரின் வரலாற்றைச் சுருக்கமாக எழுதுக.
   (ஆ) சிவஞானபோதம் சைவசித்தாந்த வளர்ச்சியில் பெறும் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுக.

8. தமிழகத்தில் வைணவநெறியின் வளர்ச்சியில் பெரியாழ்வாரின் பங்களிப்பினை மதிப்பிடுக.

9. மேல்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றினுக்குக்** குறிப்பு எழுதுக.
   (அ) காரைக்காலம்மையார்
   (ஆ) நவநாதசித்தர்
   (இ) பிராமணங்கள்
   (ஈ) மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை
   (உ) மடாதிபதிகளும் ஒழுகலாறும்

※※※

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 T II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2010 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2010 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2010

හින්දු ධර්මය II
இந்து சமயம் II
Hinduism II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண் : ....................

※ 'அ' பகுதியிலுள்ள **முதலாம்** வினாவுக்கும் 'ஆ' பகுதியிலுள்ள எவையேனும் **நான்கு** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
※ முதலாம் வினாவுக்கான விடைகளை இத்தாளிலேயே எழுதிய பின் வேறாக்கி ஏனைய விடைத்தாள்களின் மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி அ

(எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக)

1. ● பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை அடைப்புக்குறிக்குள்** எழுதுக.

1.1 மேல்வருவனவற்றுள் வேதாந்த தத்துவங்களின் மூலநூல்கள் மூன்று அடங்கும் தொகுதி
(1) உபநிடதம், பிரம சூத்திரம், பகவத்கீதை
(2) தேவாரம், திவ்விய பிரபந்தம், திருமந்திரம்
(3) வேதம், உபநிடதம், புராணங்கள்
(4) மனுஸ்மிருதி, யாஞ்ஞவல்கியர் ஸ்மிருதி, நாரதர் ஸ்மிருதி
(5) உபநிடதம், பிரம சூத்திரம், திவ்விய பிரபந்தம் (......)

1.2 மேல்வருவனவற்றுள் சாங்கிய தத்துவம் மூன்று அடங்கும் தொகுதி
(1) மாயை பிரகிருதிமாயை, சுத்தமாயை
(2) புருடன், பிரகிருதி, சிவன்
(3) ஆணவம், கன்மம், மாயை
(4) முக்குணம், அவித்தை, ஐம்பூதங்கள்
(5) பிரகிருதி, புருடன், சத்காரியவாதம் (......)

1.3 மேல்வருவனவற்றுள் சிவனின் நவந்தரு பேதத்தினுள் மூன்று அடங்கும் தொகுதி
(1) சிவம், சக்தி, பராசக்தி
(2) சிவம், சக்தி, நாதம்
(3) மகேசுவரன், சதாசிவம், ஈசுவரன்
(4) மகேசுவரன், உருத்திரன், பரமேசுவரன்
(5) விஷ்ணு, பிரமன், உருத்திரன் (......)

1.4 மேல்வருவனவற்றுள் ஆகமம் கூறும் நாற்பதங்களுள் மூன்று அடங்கும் தொகுதி
(1) காரணம், காமிகம், கிரணம்
(2) இசைபாடல், திருந்தவனம் அமைத்தல், திருமாலைகட்டுதல்
(3) சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம்
(4) ஞான பாதம், பொற் பாதம், சிவப்பேறு
(5) இயமம், நியமம், ஆசனம் (......)

1.5 மேல்வருவனவற்றுள் நாட்டார் சடங்கில் முக்கியம் பெறும் மூன்று சடங்குகள் அடங்கும் தொகுதி
(1) பலியிடல், தீப்பந்தம் பிடித்தல், கும்பாபிஷேகம்
(2) தீப்பாய்தல், கச்சுநேரல், காவடி எடுத்தல்
(3) பாற்கும்பம் எடுத்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், தூக்குக் காவடி எடுத்தல்
(4) பொங்கல், தீர்த்தம் எடுத்தல், தேர் இழுத்தல்
(5) பொங்கல், மடைபோடுதல், வழிவிடல் (......)

[பக். 2 ஐப் பார்க்க

- கீழே தரப்பட்டுள்ள **'அ'** பகுதியில் உள்ளவற்றுக்குப் பொருத்தமானவற்றை **'ஆ'** பகுதியிலிருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை **'அ'** பகுதியின் முன்னுள்ள இடைவெளியில் எழுதுக.

| | | 'அ' | 'ஆ' |
|---|---|---|---|
| 1.6 (......) | (1) | உபய வேதாந்தம் எனப்படும் தத்துவம் | (1) பருத்தித்துறை அருளம்பல சுவாமிகள் |
| 1.7 (......) | (2) | சிவாகமங்கள் கூறும் பொருள் மரபினை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மொழியில் எழுந்த நூல் | (2) பிரம சூத்திரம் |
| 1.8 (......) | (3) | சற்புத்திர நெறியில் நின்று முத்தி அடைந்த நாயனார். | (3) விசிட்டாத்வைதம் |
| 1.9 (......) | (4) | பாரதியாரின் ஞான குருவாக விளங்கிய யாழ்ப்பாணச் சுவாமியார். | (4) திருமந்திரம் |
| 1.10 (......) | (5) | உபநிடதங்களின் கருத்துகளைத் திரட்டிக் கூறும் நூல் | (5) திருஞானசம்பந்தர் |

- பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.

பதினொராம் நூற்றாண்டிலே தமிழ் நாட்டிலே உள்ள ஸ்ரீபெரும்புத்தூரிலே பிறந்தவர் இராமானுஜர். அவர் ஒரு கல்விமான். அவர் சிறந்த வைணவ பக்தர். அதனால் வைணவத்தில் பல கைங்கரியங்களை வற்புறுத்தியவர். அவ்வகையில் 1.11 ............................, ............................, ............................ முதலான கைங்கரியங்கள் குறிப்பிடத்தக்கவை. அவர் ஆழ்வார்கள் பாடல்களில் மிகுந்த பக்தியுடையவர். அதனாலே இறைவனை அடைவதற்குச் சிறந்த வழியென 1.12 ............................ கோட்பாட்டினை முன்வைத்தார். அவர் சிறந்த சமூகச் சீர்திருத்தவாதி. அதனால் சமூகத்தில் ஏற்றத்தாழ்வு இருப்பதை வெறுத்தார். தாழ்ந்த, அடிநிலை மக்களை 1.13 ............................என அழைக்க வேண்டுமென வற்புறுத்தினார். அவர் ஒரு தத்துவவாதி, புதிய தத்துவத்தை உருவாக்கினார். அதன் பிரமாண நூல்களாக வடமொழியில் எழுந்த 1.14 ............................ நூல்களையும் தமிழ்மொழியில் எழுந்த ............................ யும் கொண்டார். தத்துவம் பற்றிக் குறிப்பிடுகையில் ஈசுவரன், சத், அசத் ஆகிய மூன்றும் உண்மைப் பொருளெனக் கொண்டார். இவற்றுள் இறைவன் மட்டுமே சார்பற்ற உள்பொருள். ஏனையவை அவரைச் சார்ந்தவை. அவை பிரிக்க முடியாதவை. ஆனால் வேறுபட்டவை. பிரிக்க முடியாத இயல்பை ஒன்றாக்கி ஆளுவது இவற்றிடையே இழையோடும் பிரிக்க முடியாத தன்மையே என்பார். அதனையே 1.15 ............................ என்பர். இக்கோட்பாட்டின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டதே இராமனுசரின் சிந்தனையில் உதித்த 1.16 ............................ என்னும் கோட்பாடாகும்.

- சுருக்கமான விடை எழுதுக.

1.17 ஈழநாட்டில் வரலாற்றுப் புகழ்மிக்க சக்தி பீடங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

............................, ............................, ............................

1.18 தமிழ்மொழியில் எழுந்த சிறந்த அறநூல்கள் **மூன்றினைத்** தருக.

............................, ............................, ............................

1.19 ஈழநாட்டில் அமைந்துள்ள பஞ்ச ஈசுவரங்கள் யாவை ?

............................................................

............................................................

1.20 சங்கரர் மாயையின் சிறப்பியல்புகளாகக் கொண்டவை யாவை ?

............................................................

............................................................

**

[பக். 3 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 T II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2010 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2010 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2010

හින්දු ධර්මය II
இந்து சமயம் II
Hinduism II

※ எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி ஆ

2. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று." இக்கூற்றை மேல்வரும் அடிப்படையில் விளக்குக.
   (அ) ஆலயம் என்பதன் பொருள்
   (ஆ) ஆலய அமைப்பு முறை
   (இ) ஆலயத்தில் நித்திய நைமித்திய கிரியைகள்
   (ஈ) கோயிலுக்கும் சமூகத்துக்கும் இடையிலான உறவுகள்

3. "ஆன்மாவை முத்திக்கு வழிப்படுத்தலே சைவசித்தாந்தத்தின் நோக்கமாகும்." இக்கூற்றை பின்வரும் தலைப்புகளில் ஆராய்க.
   (அ) ஆன்மா என்பதன் பொருள்
   (ஆ) ஆன்மாவின் இலக்கணம்
   (இ) ஆன்மாவும் சாதனைகளும்
   (ஈ) ஆன்மாவும் முத்திப்பேறும்

4. "பொதுமக்கள் மத்தியில் ஆத்மிக உணர்வை வளர்ப்பதில் பெரும்பங்கினை வகிப்பது நாட்டார் வழிபாடேயாகும்."
   (அ) நாட்டார் வழிபாடு என்பதனை நீர் எவ்வாறு விளங்கிக் கொள்கின்றீர்?
   (ஆ) நாட்டார் வழிபாட்டில் இடம்பெறும் தெய்வங்களை வகைப்படுத்துக.
   (இ) நாச்சிமார் வழிபாட்டில் அல்லது ஐயனார் வழிபாட்டில் இடம்பெறும் சடங்கு முறையினை விளக்குக.
   (ஈ) பொதுமக்கள் மத்தியில் ஒழுகலாற்றையும் பக்தியையும் வளர்த்துச் செல்வதில் நாட்டார் வழிபாடு எத்தகைய பங்கினை வகிக்கின்றது என்பதனைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

5. (அ) மத்துவரின் தத்துவக் கோட்பாட்டினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.
   (ஆ) மத்துவரின் தத்துவக் கோட்பாடுகள் ஏனைய வேதாந்தக் கோட்பாடுகளோடு எவ்வகையில் தொடர்புடையவை என்பதைச் சுருக்கமாக ஆராய்க.

6. "பண்டிகைகள் விழாக்கள் என்பன சமூகத்தின் மத்தியில் ஒருமைப்பாட்டையும் ஆத்மிக நாட்டத்தையும் வழிநடத்துவதற்கான சாதனங்களாக விளங்குபவை" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினைத் தைப்பொங்கல், நவராத்திரி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிக்குக.

7. (அ) சாங்கிய தத்துவக் கோட்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக.
   (ஆ) சாங்கியக் கோட்பாடுகளுக்கும் சைவசித்தாந்தக் கோட்பாடுகளுக்கும் இடையேயான தொடர்புகளை எடுத்துக் காட்டுக.

8. சமூகத்தில் ஒழுக்கமும் அமைதியும் பேண சைவசமயிகள் வகிக்க வேண்டிய பங்கு பற்றி விளக்குக.

9. மேல்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றினுக்குக்** குறிப்பு எழுதுக.
   (அ) ஈழத்தில் முருக வழிபாடு
   (ஆ) தீட்சை
   (இ) சத்காரியவாதம்
   (ஈ) மீமாம்சை
   (உ) சண்டேசுவரர்

* * *